# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 3 July 2019*

கோட்டை :1 வாயில்:3 ஜூலை 2019

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் K.முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பரலாசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஸ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் P.பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு
முனைவர் வாணி அறிவாளன்

புறப்பொருள் வெண்பாமாலை வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் க.லெனின்

ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை,

குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு
முனைவர் தி.மணிமொழி

சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் காட்சிப்படிமம்
து. உமாமகேஸ்வரி

பதினெண் கீழ்க்கணக்கில் இருவாழ்விகள்
திருமதி ச.மீனாட்சி

தமிழ்ச் சிறுகதைகளின் மாறுபட்ட சமூகநிலைகளும் பின்புலங்களும்
முனைவர். வி.கலாவதி

தமிழ் நாடகங்களின் விளம்பர உத்திகள்
முனைவர்.க. தினகரன்

இணையத்தில் தமிழ் மொழியின்பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒருங்குறியீட்டு முறை
இரா.அருணா,

தமிழ் மின் அகராதிகள் (E-Dictionaries in Tamil)
முனைவர் மா.ரமேஷ் குமார்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்
முனைவர் சீ. இளையராஜா

சிறுதெய்வவழிபாட்டுமுறைகளில் மக்களின் எண்ணங்கள்
முனைவர் தே. அசோக்

# அகத்தினுள்

INCORPORATION & MANIFESTATIONS OF 'SATI ELEMENTS' WITHIN THE HERO-STONES OF WESTERN TAMILNADU
**Dr. C.Maheswaran**

Neolithic Grooves found at Keezanur, Javadi hills of Tamil Nadu
**Dr. R.Ramesh**

பழந்தமிழர் பண்பாட்டில் தோல் ஓவியத்தின் பயன்பாடு
**ஓவியர். கு. கவிமணி**

Recent Archaeological Explorations in Shervarayan Hills, Tamil Nadu
**-Dr. Priyakrishnan**

ஈழப்பாண்டியன் சேந்தன் மாறன் காசு
**இராஜ சுப்பிரமணியன்**

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளின் வழிபாட்டு மரபுகள்
**கோ.சதீஸ்**

தமிழகப்பழங்குடிகளின் தெருக்கூத்து அமைப்புமுறை
**முனைவர் ரே.கோவிந்தராஜ்**

உயிரியல்மற்றும் சமூகமொழியியல் பார்வைகளில் பாரதியாரின் தேசீயப் படைப்புகளின்பகுப்பாய்வு
[Biolinguistics and Sociolinguistics Approach towards Nationality in Bharathiar Patriotic Poems]
**முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா**

முகப்பு

**மராத்திய நடன மங்கை (தோல் பாவை)**

# தமிழ்

# குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு

முனைவர் தி.மணிமொழி
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத் துறை
காவேரி மகளிர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தின் பாடுபொருளாக விளங்குபவை அகமும் புறமும் ஆகும். தமிழர் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கருதினர். அன்பின் ஐந்திணையில் முதலாவதாகக் கூறப்படுவது மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சியாகும். பொதுவாக அகம் சார்ந்த இலக்கியத்தை முதல், கரு, உரிப்பொருள் என்கின்ற வகையில் பிரித்து இலக்கியம் படைக்கின்றனர். கருப்பொருள்கள் இலக்கியத்தின் பாடுபொருளை எடுத்துரைப்பதற்கு அடிப்படையாய் அமைகின்றன. மலையும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சியில் அந்நிலம் சார்ந்த சூழல்களுக்கு ஏற்பவே உயிரின் வாழ்வியல் அமைந்துள்ளன. மலை சார்ந்த உணவும், நீரும், மரமும், தொழிலும் பிறவும் அமைந்துள்ளன. இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள உயிரற்ற பொருட்களைக் கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அவ்வகையில் குறிஞ்சியின் கருப்பொருளும் பதினான்காக அமைகின்றன. அவை தெய்வம் தொடங்கி தொழில் வரைக்குமாக ஐந்திணைகளுக்கு ஏற்ப வெவ்வேறாக அமைகின்றன. அகப்பாடல்களின் கருத்தினைப்புலப்படுத்த கருப்பொருட்கள் பெருந்துணையாக நிற்கின்றன. குறிஞ்சித் தினையின் கருப்பொருட்கள் திணை சார்ந்த வெளிப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன. தலைவன் தலைவியின் வாழ்வில் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில் கருப்பொருட்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

**திறவுச் சொற்கள்**

சங்க இலக்கியம், கபிலர் பாடல்கள், கருப்பொருட்கள், காதலின் வெளிப்பாடு.

சங்க இலக்கியத்தின் பாடுபொருளாக விளங்குபவை அகமும் புறமும் ஆகும். தமிழர்காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கருதினர். அன்பின் ஐந்திணையில் முதலாவதாகக் கூறப் படுவது குறிஞ்சி. மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சியாகும். மலைசார்ந்த மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றி கூறுவது குறிஞ்சித்திணை. பொதுவாக அகம் சார்ந்த இலக்கியத்தை முதல், கரு, உரிப்பொருள் என்கின்ற வகையில் பிரித்து இலக்கியம் படைக்கின்றனர். அவற்றில் முதற்பொருளாகிய நிலமும் பொழுதும் முதன்மையானதாகும். இறுதியாய் அமையும் உரிப்பொருள் இலக்கியத்தின் மையக்கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதற்கிடையில் அமைந்திருக்கும் கருப்பொருள்கள் இலக்கியத்தின் பாடுபொருளை எடுத்துரைப்பதற்கு அடிப்படையாய் அமைகின்றன. அகம் சார்ந்த காதலைப் புலப்படுத்தும் நிலையைக் கருப்பொருட்கள் கைக்கொள்கின்றன. குறிஞ்சித் திணையைப் பொருத்தவரையில் அந்நிலம் குறித்துப் புலவர்கள் பலர் பாடியிருக்கிறார்கள். அவர்களுள் குறிஞ்சி நிலத்தால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அதிகமாகக் குறிஞ்சியைப் பாடிய புலவர் கபிலர் ஆவார். குறிஞ்சி நிலத்தையும் மக்களையும் ஏனைய உயிரினங்களையும் இயற்கையையும் தம்கவியில் கொண்டு படைப்பு பலபடைத்தவர். கபிலர் பாடிய பாடலிருந்து அகவாழ்வினை வெளிப்படுத்த உதவும் கருப்பொருளை ஆராய்வதே இங்கு நோக்கமாக அமைகிறது.

**குறிஞ்சிவிளக்கம்**

தமிழர் ஒன்றிற்கு பெயரிடும் பொழுது இடுகுறியாகவும் காரணத்தின் அடிப்படையிலும் பெயரிட்டனர். காரணப் பெயர்கள் பொருள் பொதிந்த நிலையில்

காணப்படுவது சிறப்பிற்குரியதாகும். அந்த வகையில் திணைகளுக்கான பெயர்களும் காரணப்பெயர்களாகவே அமைந்துள்ளன.

"குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம் எனவும், முல்லுதல் முல்லை எனவும், பற்றுதல் பாலை எனவும், நெய்வது நெய்தல் எனவும் கூறுவர்" 1

முதன் முதலில் காதல் மணத்திற்கு அடையாளமாகக் குறிஞ்சிப்பூவை சூடியதால் அக்களவு மனஒழுக்கத்திற்கு 'குறிஞ்சித் திணை' எனப் பெயர் வைத்தனர். இங்ஙனம் குறிஞ்சிப் பூவை சூடிக்கொண்டது வரலாற்றின் தொடக்கமாகும். இவ்வாறு பழந்தமிழரின் ஐந்திணைப் பகுக்கும் முறை உலகில் வேறெங்கும் இத்துணைச் சிறப்போடுகாண இயலாத ஒன்றென உறுதி கூறலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**குறிஞ்சியும் கபிலரும்**

சங்க நூல்களில் குறிஞ்சித்திணையில் மிகுதியானப் பாடல்களைப் பாடிய சிறப்புக்குரியர் கபிலர் ஆவார். அவருடைய பாடல்களில் குறிஞ்சி வளமும், குறிஞ்சி நிலவாழ்க்கையும் அவரின் புலமையும் வெளிப்படுகின்றன. குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் கபிலரே முதன்மையானவர்.

"இயற்கை எழில் நயப்போருக்கு கபிலர் பாடல்கள் வற்றாச்சுரங்கம்; அவர் பாடல்களிலே கவிதைநயம் உண்டு. கனிந்த இசையும் உண்டு. கலையின் மெருகும் உண்டு. கருத்துநுட்பம் உண்டு பண்பாட்டின் உயிர் உண்டு. மேலும் கபிலர் பாடல்களில் சிறப்பாகக் கொள்ளை எழில் குலவும் குறிஞ்சியே எல்லாமாய்ப் பொழியும் மாண்பினைக் காணலாம். இதனால் குறிஞ்சிக்கு கபிலர் என்றால் அது எவ்வகையிலும் பொருந்தும்"2

"மலையும் மலைப்பாங்கரும் ஆகிய சூழ்நிலையில் வைத்துக் களவொழுக்கத்தைப் புனையவல்ல பேராளர் கபிலர். களவின் பலதுறைகளும் இவரிடத்துப் பாடப்படுகின்றன. களவுத் துறைகளுள் வரைவுத் துறைகளை விரும்பிப்பாடும் இயல்பினர் என்று அறிகின்றோம். அதனாலன்றோ ஆரிய அரசன் பிரகதத்தனுக்குக் குறிஞ்சிப்பாட்டை அறத்தொடுநிற்றல் என்னும் துறையில் வைத்துக் கற்பித்தார் என்று கபிலரின் சிறந்த மதிநுட்பத்தையும் அகத்துறையில் ஈடுபாட்டையும் வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவார்"3

"பலர் புகழ் நல் இசைவாய்மொழிக் கபிலன்"என்பது நக்கீரர் பாராட்டு.4

கபிலர் குறிஞ்சி நிலத்தை விரும்பியதனால்தான் மிகுந்த ஈடுபாட்டுடன் அங்குள்ள சூழலைக் காட்சிப்படுத்த இயன்றது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குறிஞ்சித்திணைவெளிப்பாடு

இயற்கையே வாழ்வினை நடத்திய வாழ்வினை நடத்திய வழந்தமிழர் தங்களின் வாழ்வை அகம்,புறம் என வகுத்தளித்தனர்.

உள்ளம் மகிழும் காதல் வாழ்க்கை அகம் என்றும், வீரம், கல்வி, கொடை அடங்கிய சமூகவாழ்வை புறம் என்றும் பகுத்து வாழ்ந்தனர். இவற்றில் முதல், கரு, உரி என்னும் பொருளைக் கொண்டு வாழ்ந்தமுறை குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலைமுறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடும் காலை (தொல்.பொருள்.949)

என்ற நூற்பாவில் முப்பொருள் குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தாங்கள் வாழக்கூடிய நிலமும் அந்நிலத்திற்குரிய சிறந்த பொருளும் முதற்பொருளாகும். பொழுதைப் பொறுத்தவரையில் ஓராண்டிற்குரிய பிரிவில் பெரும் பொழுதும், ஒருநாளில் பிரிப்புமுறை சிறுபொழுதுமாக விளங்குகிறது. அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், உணவு, தொழில், மக்கள், மரங்கள் முதலான பதினான்கும் கருப்பொருள் எனப்பட்டது.

**கருப்பொருள்**

மலையும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சியில் அந்நிலம் சார்ந்த சூழல்களுக்கு ஏற்பவே உயிரின் வாழ்வியல் அமைந்துள்ளன. மலை சார்ந்த உணவும், நீரும், மரமும், தொழிலும் பிறவும் அமைந்துள்ளன. இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள உயிரற்ற பொருட்களைக் கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அவ்வகையில் குறிஞ்சியின் கருப்பொருளும் பதினான்காக அமைகின்றன. அவை தெய்வம் தொடங்கி தொழில் வரைக்குமாக ஐந்திணைகளுக்கு ஏற்ப வெவ்வேறாக அமைகின்றன.

தெய்வம் உணாவேமாமரம் புள்பறை
செய்தியாழின் பகுதியொடுதொகைஇ
அவ்வகைபிறவும் கருஎனமொழிப(தொல்.பொருள். **964**)

என்றுகருப்பொருளைசுட்டுவார்தொல்காப்பியர்.

ஆரணங்குஉயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு
ஊர் நீர் பூ மரம் உணாபறையாழ்பண்
தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும் (அக.விளக்.**19**)

என்றுகருப்பொருளைஅகப்பொருள் விளக்கம் எடுத்துரைக்கிறது.

**குறிஞ்சிதிணையின்; கருப்பொருள்**

**1.**தெய்வம் - சேய் (முருகக்கடவுள்) **2.** உயர்ந்தோர் -பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி **3.** தாழ்ந்தோர் - குறவர், கானவர், குறத்தியர் **4.** புறவை - கிளி,மயில் **5.** விலங்கு - புலி, கரடி, யானை, சிங்கம் **6.** ஊர் - சிறுகுடி **7.** நீர் - அருவிநீர், சுனைநீர் **8.** பூ - வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட் பூ **9.** மரம் - சந்தனம், தேக்கு, அகில், அசோக், மூங்கில் **10.** உணவு - மலைநெல், மூங்கிலரிசி, தினை **11.** பறை - தொண்டகப் பறை **12.** யாழ் - குறிஞ்சியாழ் **13.** பண் - குறிஞ்சிப்பண் **14.** தொழில் - வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்

**1.** தெய்வம்

கருப்பொருளின் முதலாவதாக அமைவது அந்நிலம் சார்ந்த தெய்வமாகும். தமிழ்ச் சமூகத்தில் முதன்மையான பல செயல்பாடுகளில் தெய்வச்சிந்நதனைகள் மேலோங்கிய வண்ணம் இருந்து வருகிறது. “தமிழர்களுக்கு மலைமேல் வாழ்க்கை தொடங்கிய அக்காலத்திலேயே கடவுளுண்மை முகிழ்த்து விட்டது. தெய்வம் உணாவே, மாமரம் புள் எனத் தெய்வமும் திணைக் கருப்பொருளாக எண்ணப்பட்டு வருதலின் தமிழர் தெய்வங்கள் தமிழ் நிலத்தாய் ஈன்றவை என்று துணிந்து கூறலாம் என்பர் வ.சுப.மாணிக்கம்”**5**

குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன் குறிஞ்சி நிலத்தில் மக்களின் வாழ்வியலில் முதன்மையான நிலைமையைப் பெறுகிறார்.

கறிவாளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியாவேலன் வெறிஎனக் கூறும் (ஐங் -**243**)

என்ற சங்கப் பாடலில் தலைவன் பிரிந்து இருக்கும் தலைவி, தலைவனையே எண்ணி துயருறுகிறாள். அன்னை தலைவியின் துன்பத்திற்கு தீர்வு காணவிழைகிறாள். துயரத்தைப் போக்குகின்ற வழியாக இறைவழிபாட்டை மேற்கொள்கிறாள். மிளகுக் கொடிவளரும் குறிஞ்சியின் மலையில் குடிக்கொண்ட முருகக் கடவுளை வேண்டி வழிபாடு நிகழ்த்தினால் தன் மகளுக்கு ஏற்பட்ட பிணி நீங்கும் என அன்னை நம்புகிறாள். தன்துன்பத்தைப் போக்க இறைவனை அடைதலே சரியானத் தீர்வாகும் என்கிற மனநிலை வெளிப்படுகிறது. இந்த மனநிலை சங்ககாலத்தில் இருந்து இன்று வரைக்கும் மக்களிடையே காணப்படுகிறது.

குறிஞ்சி நிலமாதலால் குறிஞ்சியின் கடவுள் முருகனைக் கொண்டு வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. குறிஞ்சித் திணைக்குரிய கடவுள் முருகன் மேற்கண்டபாடலில் அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.

**2.** உயர்ந்தோர்

சமூக வாழ்வில் உயர்ந்தோர் அல்லோர் என்ற நிலைப்பாடும் காலங்காலமாக இச்சமூகத்தில் நிலவி வருவதையும் காணலாகிறது. அந்த வகையில் குறிஞ்சி நிலத்திலும் மக்களின் வாழ்வியற் செயற்பாடுகளினைக் கொண்டு உயர்ந்தோர் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.

வெற்பன்

குறிஞ்சி நிலத்தில் 'வெற்பன்' என்பான் உயர்ந்தோனாகக் கருதப்படுகிறான்.

பெரும் பெயல் பொழிந்தஏமவைகறை
பல்லோர் உவந்தஉவகைஎல்லாம்
என்னுள் பெய்தந்தற்றே - சேண் இடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான் தோய் வெற்பன் வந்தமாறே (அகம் -42)

என்ற பாடலில் மழை பெய்யாததால் வறுமையுண்டாகிக் கலப்பை முதலிய கருவிகள் செயலற்று இருக்கும். கோடைகாலத்தில், ஒருநாள் இரவுநீர் நிலைகள் அனைத்தும் நிறையுறுமாறு மழைபெய்து அதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதுபோல நெடுந்தொலைவில் உள்ள பக்கமலைகளை உடைய நம்தலைவனாகிய வெற்பன் தாம் விரும்பியபடி மணந்து கொள்ள வந்தான். அம்மகிழ்ச்சி நீர் நிறைந்த நீர்நிலைக்களைக் கண்ட மக்களின் மகிழ்ச்சி போன்று தனக்கு அமைந்ததாகத் தோழி தலைவியிடம் கூறுகிறாள். இப்பாடலில் இடம் பெறும் தலைவன் 'வெற்பன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

வெற்பன் எனக் குறிப்பிடப்படுபவன் குறிஞ்சி நிலத்தில் உயர்ந்தோனாகக் கருதப்படுகிறான். 'வெற்பு' என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். வெற்பன் என்னும் தலைவன் மலைப்பகுதியான குறிஞ்சியைச் சார்ந்தவன் எனும் பொருளில் அமைந்துள்ளது. இச்சொல் வழக்கை உயர்ந்தோராகக் குறிப்பிடப்படுகிறது.

**கொடிச்சி**

குறிஞ்சி நிலத்தில் வாழும் பெண்ணை 'கொடிச்சி' என்று அழைக்கின்றனர். உயர்ந்தோரில் பெண்ணை அழைக்கும் வழக்காக இச்சொல் அமைகிறது.

குன்றநாடன் குன்றத்துக் கவாஅன்
பைஞ்சுனைப் பூத்தபகுவாய்க் குவளையும்
கண்போல் மலர்தலும் அரிது; இவள்
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே(ஐங் - 299)

என்ற பாடலில் தலைவியின் அழகு குறிப்பிடப்படுகிறது. மலைச்சாரலில் உள்ள சுனையில் குவளை மலர் பூத்திருக்கிறது. மலையில் அழகுற மயிலும் காட்சியளிக்கிறது. ஆனால் தலைவியினுடைய கண்ணோடு ஒப்பிடும் போது குவளைமலர் அத்துணைச் சிறப்பாய் அமைந்து விடவில்லையென்றும் தலைவியினுடைய சாயலோடு ஒப்பிடும்போது மயிலின் சாயலும் குறைவாகவே இருப்பதாககபிலர் குறிஞ்சி நிலத்தலைவியை அழகானவளாய் என்று படைத்துக் காட்டுகிறார். இக்குறிஞ்சி நிலத்தலைவியை 'கொடிச்சி' எனும் சொல்லால் குறிப்பிடுகிறார். கொடிச்சி எனும் வழக்கு உயர்ந்தோரை வழங்கும் வழக்காக அமைகிறது.

**3. அல்லோர்**

மக்கள் வழங்கக்கூடிய அனைத்துச் சொற்களும் ஏதேனும் பொருளை மையமிடுவதாகவே அமைகின்றன என்றுதொல்காப்பியர் குறிப்பிடுவார்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே(தொல் - சொல்.155)

அந்தவகையில் திணை சார்ந்த மக்களின் பெயர்களிலும் உயர்ந்த நிலையும் அதற்கு மாறான அல்லாத நிலையும் மையமிடுகின்ற தன்மையைக் காண இயலுகிறது. அந்த வகையில் 'குறவர்' என்பது குறிஞ்சி நிலமக்களில் ஆண்களைக் குறிப்பிடுவர். அச்சொல் உயர்ந்தோர் அல்லாதவரைக் குறிப்பிடுவதாக அமைகிறது.

குறவர் முன்றில் மாதீண்டுதுறுகல்
கல்லாமந்திகடுவனோடுஉகளும்
குன்றநாட நின் மொழிவல் (ஐங் - 277)

என்ற பாடலில் குறிஞ்சி நிலமக்கள் தம் முற்றத்தில் விலங்குகள் உரசி உடல் தினவைப் போக்கிக் கொள்ள உதவமாறு குண்டுக் கல்லைப் போட்டு வைப்பர் என்றும் தலைவியை பசலையுமாறு பரிந்துச் செல்வதற்குரிய காரணத்தைக் கூறுமாறும் தோழி தலைவனிடத்தில் வினவுவாள். இக்கூற்றில் குறிஞ்சி நிலமக்களைக் குறிப்பிடும் பொழுது 'குறவர்' எனக் குறிப்பிடப்படுகிறது. இக்குறவர் என்பது குறிஞ்சி நிலத்தில் வசிக்கும் உயர்ந்தோர் அல்லாதவரைக் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது.

**4. புள்**

தலைவன் தலைவியை மையமிட்ட வாழ்வியலை இலக்கியமாகப் பதிவிடும் பொழுது கருப்பொருட்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன. அந்த வகையில் அந்நிலம் சார்ந்த புள்ளினமும் தனக்கென ஓரிடத்தைப் பிடிக்கின்றது. குறிஞ்சி நிலத்தின் பறவைகளாகக் கிளி, மயில் அமைகின்றன.

கிள்ளை

குறிஞ்சி நிலத்தில் கிள்ளை என்னும் பெயர் பெறும் கிளிகள் முதன்மையான புள்ளினமாகும்.

வெள்ளவரம்பின் ஊழி போகியும்
கிள்ளைவாழியபலவே - ஒள் இழை
இரும்பல் கூந்தற் கொடிச்சி(ஐங் - 281)

என்ற பாடல் தலைவன் கூற்றாக அமைந்ததாகும். கிளிகளைப் பல்லாண்டு வாழ வேண்டும் எனத் தலைவன் வாழ்த்துகிறான். பல ஊழிகளாகிய, வெள்ளமாகிய இலட்சம் ஆண்டுகளுக்கு மேல் வாழ வேண்டும். ஏனெனில் அவைதாம் ஒளிபொருந்திய ஆபரணங்களையும் நீண்ட கரிய கூந்தலையும் பருத்த தோள்களையுமுடைய என் தலைவியாகிய குறிஞ்சி நிலப்பெண்ணைக் காவலுக்கு வரச் செய்தவை. எனவே அக்கிளிகள் வாழ்க எனத் தலைவன் வாழ்த்துகிறான்.

**5. விலங்கு**

உலக உயிர்களில் எண்ணற்ற உயிரினங்கள் அமைகின்றன. விலங்கின் இனங்களைத் தீர்மானிப்பவை அந்த இடம் சார்ந்த சுற்றுச்சூழல்களே ஆகும். குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகளில் புலி, கரடி, யானை, சிங்கம் ஆகியவை அமைகின்றன.

**யானை**

யானையும் குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்கு ஆகும். தலைவியின் அகவாழ்வினைப் பதிவு செய்திடும் வேளையில் கருப்பொருளாக அமைபவை நேரடியாகவும் உவமையாகவும் இடம் பெறுகின்றன. அந்தவகையில் குறிஞ்சியின் விலங்கான யானை உவமையாக அமைகின்றது.

புனக்கிளிகடியும் பூங்கட் பேதை
தான் அறிந்தனளோ இலளோபானாள்
பள்ளியானையின் உயிர்த்துஎன்
உள்ளம் பின்னும் தன் உழையதுவே (குறுந் - 142)

என்ற பாடலின் வழியாகத் தலைவியுடன் கூடிப்பிரிந்த பின்னும் நள்ளிருள் சாமத்தில் படுத்திருக்கும் யானை பெருமூச்சுவிட்டது போல பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பதாகத் தலைவன் குறிப்பிடுகிறான். மேற்கண்ட சூழலில் தலைவன் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற பாங்கில் கருப்பொருட்கள் இடம் பெறுகின்றன. அந்தவகையில் குறிஞ்சியின் விலங்கான யானை இங்கு தலைவனின் பெருமூச்சிற்கு உவமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6. ஊர்**

உலக உயிரினங்களில் ஓரினமாகத் தோன்றிய மனித இனம் தன் சிந்தனைத் திறத்தால் ஏனைய இனங்களைக் காட்டிலும் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்து முன்னேறி வருகிறது. அவற்றுள் நாடோடிகளாக வாழ்ந்த இனம் ஓரிடத்தில் தங்கி, தனக்கான குடியிருப்புகளை அமைத்துக்கொண்டது முதன்மையான செயல்பாடுகளுள் அடங்குவதாகும். அவ்வாறாக அமைந்த குடியிருப்புகளைக் கொண்டிருந்த பகுதிகளை ஒவ்வொரு பெயரிட்டும் அழைத்துக் கொண்டனர். அதனை ‘ஊர்’ என்று அழைத்தனர். பழந்தமிழகத்திலும் பல்வேறு ஊர்ப் பெயர்கள் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு திணைகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அந்தவகையில் குறிஞ்சி நிலத்திற்கு ‘சிறுகுடி’ என்று பெயரிட்டு அழைத்தனர்.

கல்முகைத் ததும்பும் பல்மலர்ச்சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர் ஓரன்னசாயல்
தீஓரன்னஎன் உரன் அவித்தன்றே (குறுந் - 95)

என்ற பாடலில் பல மலர்களை உடைய அழகிய மலைச்சாரலில் சிற்றூரில் பெரிய தோள்களையுடைய தலைவி நீரைப்போன்ற தண்மையான சாயலை உடையவள். அந்நீர்ச் சாயல் தலைவனின் நெருப்புப் போன்ற மனவலிமையை இழக்கச்செய்து விட்டதாகத் தலைவனின் கூற்று அமைகிறது. இதில் தலைவியின் ஊரான குறிஞ்சி நிலத்தினைக் குறிப்பிடும் பொழுது ‘சிறுகுடி’ என்று பதிவு செய்துள்ளதை அறியமுடிகிறது.

**7. நீர்நிலை**

உயிரினங்களின் வாழ்விற்கு நீர் ஆதாரமாகும். நீர் இல்லாவிடில் எவ்வித செயல்பாடுகளும் நடைபெறாது.

நீர்இன்றுஅமையாதுஉலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்றுஅமையாதுஒழுக்கு(குறள் - 20)

என்பவார் வள்ளுவர். ஆதலால் உயிர்களின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் உறுதுணையானது நீர் ஆகும். திணை சார்ந்த மக்களும் தங்களின் நீர் நிலைக்கு ஏற்ப அவற்றிற்கு பெயரிட்டு அழைத்துக் கொண்டனர்.

அருவி

குறிஞ்சித்திணை சார்ந்த மக்கள் தங்களின் நீர்நிலைக்கு ஏற்ப பெயரிட்டு அழைத்தனர்.

மணிநிறம் கொண்டமாமலைவெற்பில்
துணிநீர் அருவிநம்மோடுஆடல்

எளியமன்னால் அவர்க்கு இனி
அரியஆகுதல் மருண்டனென் யானே (ஐங் - 224)

என்ற பாடல் தலைவி கூற்றாய் அமைகிறது. பக்கமலைகள் நீலமணி போன்ற நிறமுடையவை. அவற்றிலிருந்து தெளிந்தநீர் அருவி ஒழுகிறது. அவ்வருவியில் தலைவரோடு நீராடுவது முன்பு எளிதாக இருந்தது. இனி அரிதாகும் என்பதை எண்ணி தோழியிடம் தலைவி வருந்துகிறாள்.

மேற்கண்ட பாடலில் குறிஞ்சி நிலத்திற்குரிய நீர் நிலையாகக் கருதக்கூடிய அருவி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அருவி குறிஞ்சி நிலம் சார்ந்த திணைக்கே உரிய கருப்பொருளாகும்.

**8. பூ**

மலர்ப்பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் காலங்காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். இறைவனுக்காக வழிபாட்டில் பலியிடக்கூடிய வன்முறை வழிபாடும் பூவும் புகையும் இட்டு வழிபடும், மென்முறை வழிபாடும் தொடர்ச்சியாகக் காணப்பட்டு வருகின்றன. அந்தவகையில் மலர்கள் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகின்றன. திணை சார்ந்த மலர்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன. அந்த அடிப்படையில் குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்களில் வேங்கை, குறிஞ்சி, காந்தள் முதலிய மலர்கள் அமைகின்றன. மலரைப் பற்றி குறிப்பிடும் வேளையில் கபிலர் குறிப்பிடும் குறிஞ்சி மலர்கள் திணைக்கு அழகு சேர்க்கின்றன.

ஒண் செங்காந்தள் ஆம்பல்இ அனிச்சம்
வான் கண் கழீஇயஅகல் அறைக் குவைஇ (குறி.பா.91-98)

என்றுகுறிஞ்சிநிலத்தில் மலர்களைப் பட்டியலிடுகிறார் கபிலர்.

**வேங்கை**

“வேங்கை என்னும் சொல் வேங்கை மரத்தினையும் குறிக்கும் புலியினையும் குறிக்கும். சொல்லளவில் மட்டும் அன்றி வேங்கைமரம் பூத்துக் குலுங்கும் நிலையிலும் புலிபோலத் தோன்றுதல் உண்டு.”6

குறிஞ்சிநிலத்தில் வேங்கைமலர் குறிப்பிடத்தக்க நிலையினைப் பெறுகிறது.

கன்று ஆற்றுப்படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்றவேங்கைமலர்பதம் நோக்கி
ஏறாது இட்டஏமப் பூசல்
விண் தோய்விடரகத்து இயம்பும்(குறுந் - 241)

என்ற பாடலில் இடைச் சிறுவர் மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தின் கீழிலிருந்து அதன்மீது ஏறாமலே பூக்கள் உதிர்வதற்காகப் புலி புலி என்று கூவினர். அவ்வினிய ஆரவார ஒலி விண்ணளவு உயர்ந்த மலைப்பிளவுகளில் எதிரொலிக்கும் குன்ற நாடனாகிய தலைவனைக் கண்ட தலைவியின் கண்கள் காமத்துயரைப் பொறுத்திருந்தாலும் காதலாகிய நட்பு உரிமையால் கண்கள் தாமே அழுதனவாக தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

தலைவியின் துயரத்தைத் தோழியிடம் கூறும் வேளையில் சுற்றுச் சூழலைமையமிடும் நிலையில் கருப்பொருளாக வேங்கை மலரானது குறிப்பிடப்படுகிறது. மலை சார்ந்த நிலத்தில் வேங்கை மலர் திணை வெளிப்பாட்டை இவண் வெளிப்படுத்தவது குறிப்பிடத்தக்கதாகும்.

**9. மரம்**

பழந்தமிழ்ச்சமூகம் இயற்கைச் சார்ந்த வாழ்க்கையினை வாழ்ந்தது. அந்தவகையில் தாவரங்களைத் தங்களின் உறவாகத் தமிழர் காலங்காலமாகக் கருதி வந்த நிலையை இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

நும்மினும் சிறந்ததுநுவ்வைஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையதுநலனே
அம்மநாணுதும்நும்மொடுநகையே(நற்.172)

என்ற பாடலில் தலைவனும் தலைவியும் தனிமையில் புன்னை மரத்தடியில் சந்திக்கிறார்கள். அந்தப் புன்னையைத் தலைவியின் சகோதரியாகத் தாய் கூறி வளர்த்துவருகிறாள். அந்த நினைவு தலைவனோடு இருக்கும்பொழுது தலைவிக்கு வருகிறது. அந்தச் சூழலில் அதற்குமேல் தலைவனோடு தன் சகோதரியாகக் கருதக்கூடிய புன்னைமரத்தடியில் இருக்க தலைவி நாணம் கொள்கிறாள்.

குறிஞ்சித் திணையின் கருப்பொருளில் சந்தனம், அகில், அசோகு, மூங்கில் போன்றமரங்கள் இடம் பெறுகின்றன.

**அகில்**

குறிஞ்சி நிலத்தின் மரங்களில் அகிலும் ஒன்று மணமிக்க மரமான அகில் மரம் மலைப்பகுதிகளில் சிறப்பு பெறுகிறது.

சாத்தமரத்தபூழில் எழுபுகை
கூட்டுவிரைகமழும் நாடன்
அறவற்குளவனோஇ நாம் அகல்வு? அன்னாய்(ஐங் - 212)

என்ற பாடலில் சந்தன மரங்களுக்கிடையே உள்ள அகில் கட்டையின் இணைந்த மணப்புகையும் சந்தனப் பூக்களும் இரண்டும் இணைந்து நறுமணத்தோடு சேர்ந்து ஒரு புதுவகை மணம் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

தலைவனின் உயர்வினைக் குறிப்பிடும்போது நறுமணம் மிக்க மரங்களைப் பற்றி கபிலர் குறிப்பிடுகிறார். தலைவனின் சிறந்த பண்பினைக் குறிப்பிடும் வேளையில் விரும்பத்தக்க அகிலும் ‘பூழில்’ என்ற பதத்தால் குறிப்பிடப்படுகிறது. அகிலும் திணை வெளிப்பாட்டை விளக்கி அமைகிறது.

**10. உணவு**

ஒவ்வொரு உயிரினங்களும் முதன்மையான இரண்டு பணிகளை மேற்கொள்கின்றன. உணவு தேடுதலும் தன் இனத்தைப் பெருக்குதலுமேயாகும். உணவை தீர்மானிப்பது அந்தந்த இடம் சார்ந்த இயற்கை அமைப்பாகும். மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தின் உணவாகத் தேனும் தினையும் பழமும் கிழங்கும் மலைநெல்லும் மூங்கிலரிசியும் அமைகின்றன.

**தினை**

குறிஞ்சி நிலத்தின் உணவில் தினையும் அமைகிறது. அத்தினையுணவு அந்நிலம் சார்ந்த மக்கள் மட்டுமின்றி ஏனைய உயிரினங்களுக்கும் உணவாகப் பயன்பட்டிருக்கின்றன.

தா அய் இழந்ததழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினைஉணீஇ கானவர்
வரைஓங்குஉயர்சிமைக் கேழல் உறங்கும்(ஐங் - 268)

என்ற பாடலில் தாயை இழந்த, நெருங்கிய வரிகளையுடைய இளங்குட்டியுடன் வளமான மலையில் விளைந்த சிறுதினையின் கதிர்களை உண்டு கானவர் வாழும்மலை உச்சியில் ஆண் பன்றி உறங்கும் தன்மையுடைய மலைநாட்டுத் தலைவன் என்று தோழி கூறுகிறாள். மலைப்பகுதிக்குரிய உணவுப் பயிராகத் தினைகள் விளைந்திருப்பது இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**11. பறை**

முரசு, முழவு, பறை, துடி முதலியன அக்காலத்தில் இருந்த தோற்கருவியாகும் அருவியின் முழக்கத்திற்கு முழவின் ஒலியையும் பறையின் ஓசையினையும் உவமையாகப் புலவர்கள் கூறியுள்ளனர். ஒரு செய்தியை அனைவருக்கும் தெரிவிக்க பறையடித்துக் கூறும் வழக்கம் சிற்றூர்களில் இன்றும் உள்ளது. இப்பழக்கம் பண்டைத்தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இப்பழக்கத்தைக் குறிஞ்சி நிலமக்களும் கடைப்பிடித்ததைக் கபிலர்தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

**தொண்டகப்பறை**

குறிஞ்சி நிலமக்கள் தொண்டகப் பறை அடித்தச் செய்தியைக் கபிலர் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

தேம் கமழ் இரைவேங்கை சூடி
தொண்டகப் பறைசீர் பெண்டிரொடுவிரைஇ
மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து (அகம்.118)

என்ற பாடலில் வேங்கை மலர்களைச் சூடித் தொண்டகப்பறையை அடித்துக் கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடும் சிறுகுடியின் தெய்வமான முருகனுக்கு ஒப்பானவர் என்று தலைவனைத் தோழி குறிப்பிடுகிறார்கள். இதன்வழி இசையின் மீது இருந்த ஈடுபாட்டையும் மரபு வழியாகத் தொண்டகப்பறையைக் குறிஞ்சி நிலமக்கள் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.

***12. யாழ்***

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் இசைக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்று விளங்கியிருக்கின்றனர்.

வரைஇழிஅருவிப் பாட்டொடுபிரசம்
முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்(அகம். 318)

என்ற பாடலில் மலையில் இருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது யாழ் நரம்பின் இசைபோல இம்மென்று ஒலிக்கும். இதில் வண்டினங்கள் ஒலிப்பது யாழ் நரம்பின் இசையைப் போல இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பழங்காலமக்கள் இசைக்கலையினை அனுபவித்த நிலையை இது வெளிப்படுத்துவதாய் அமைகிறது. இதில் குறிஞ்சித்திணையின் கருப்பொருள் நன்கு வெளிப்பட்டுள்ளதை அறியலாம்.

***13. குறிஞ்சிப்பண்***

நட்டராகம் நிரம்பிய பாலையாழினை இயக்கவல்லவன் தன்கையால் இசைத்த செய்தி குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிடப்படுகிறது. நட்டபாடையாகிய நைவளம் மிகுந்த மெல்லொலியுடன் பாடப்படுவதாகும்.

நைவளம் படுநிலபாலை இல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இளிரும் (குறி.பா.146-147)

இதில் குறிஞ்சி நிலத்திற்குரிய தனிப்பண் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிபண்ணை வெறியாட்டுக்கும் வேட்டம் போவதற்கும் பாடுவாரெனத் தெரிகிறது.

***14. தொழில்***

மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் இடத்திற்கேற்பவும் மக்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தொழில் நிலைகள் அமைகின்றன. வெறியாடல், மலைநெல் விதைத்தல் தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவிநீராடல், சுனை நீராடல் போன்றவை குறிஞ்சிநிலம் சார்ந்த தொழில்களாக அமைகின்றன.

தினைகாத்தல்

தினையைக் காப்பதற்காகக் குறிஞ்சி நிலமக்கள் பரண் அமைத்துப் பறவைகளை விரட்டுகின்றனர்.

ஏனல் அம் சிறுதினைகாக்கும் சேணோன்
ஞெகிழியின் பெயர்ந்தநெடுநல் யானை
மீன்படுசுடர் ஒளிவெரூஉம்
வான் தோய் வெற்பன் மணவாஊங்கே (குறுந். 357 : 5-8)

என்ற பாடலில் தினைப்புனத்தில் உள்ள தினையைக் காக்க பரண்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய கொள்ளிக் கட்டையைக் கண்டு அஞ்சி வானத்தில் எரிநட்சத்திரம் எரிந்து விடும் என்று அஞ்சி ஓடும் யானை வாழ்கின்ற வானளாவி உயர்ந்த குறிஞ்சி நிலத்தின் தலைவன் என்று தோழி குறிப்பிடுகிறாள். தினையைக் காப்பதற்கு வேண்டிய பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர். தினைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் இதன்வழி அறியலாம்.

**நிறைவாக**

அகப்பாடல்கள் முதல், கரு, உரிப்பொருள் என்றப் பகுப்புகள் முன்னோர் வகுத்த இலக்கிய மரபாகும். அந்த வகையில் சங்க இலக்கிய அகப்பாடல்கள் அவ்விதம் அமைகின்றன. அகப்பாடல்களின் கருத்தினைப் புலப்படுத்த கருப்பொருட்கள் பெருந்துணையாக நிற்கின்றன. கருப்பொருட்கள் தான் காதலின் உணர்வுகளை வெளிப்படுத்த அடிப்படையாய் அமைகின்றன. இயற்கையின்றி மனிதன் வாழ இயலாது என்பதைப் போல இயற்கையாய் விளங்கும் கருப்பொருட்கள் இன்றி காதலை விளக்கிட இயலாது. அந்த வகையில் குறிஞ்சித்திணையின் கருப்பொருட்கள் திணை சார்ந்த வெளிப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன. தலைவன் தலைவியின் வாழ்வில் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில் கருப்பொருட்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. இராம. குருநாதன், குறிஞ்சிகாட்டும் சமுதாயம் ப.10
2. மு. வரதாராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.120
3. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 93
4. மேலது ப.316-317
5. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 169.
6. மு. வரதாராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.294

**துணைநூற்பட்டியல்**

1. குருநாதன், இராம.

குறிஞ்சிகாட்டும் சமுதாயம்

தமிழ்ச் சாலை

எண் : 138,சாய் நகர் 3-வது தெரு

விருகம்பாக்கம், சென்னை - 600 092, முதற்பதிப்பு - ஆகஸ்ட் 2007

2. மாணிக்கம்,வ.சுப.

தமிழ்க்காதல்
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம் - 01
இரண்டாம் பதிப்பு - 2005.

3. வரதராசன், மு.
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை
பாரிநிலையம்
90,பிராட்வே
சென்னை - 600 108.
மறுபதிப்பு - 2011.

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2019, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- செப்டம்பர் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879